விருதுநகர் பட்டாசு ஆலையில் வெடி விபத்து:

உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆழ்ந்த இரங்கல்!

தேவைப்படும் அனைத்து உதவிகளையும் ஒருங்கிணைக்க அறிவுறுத்தல்!

சென்னை, ஏப்.20-

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

விருதுநகர் மாவட்டம் கட்டனார்பட்டியில் ஏற்பட்ட பட்டாசு ஆலை வெடி விபத்தில் பலர் உயிரிழந்துள்ள துயரச் செய்தி மிகுந்த வேதனையளிக்கிறது. உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கல்கள்.

மீட்புப் பணிகளை விரைவுபடுத்திக் கண்காணிக்கவும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஆறுதல் கூறவும் உடனடியாகச் சம்பவ இடத்திற்கு விரையுமாறு மாண்புமிகு அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் மற்றும் தங்கம் தென்னரசு ஆகியோரைக் கேட்டுக் கொண்டுள்ளேன்.

இது குறித்து அறிந்ததுமே மாவட்ட ஆட்சியரைத் தொடர்புகொண்டு, தேவைப்படும் அனைத்து உதவிகளையும் ஒருங்கிணைக்க அறிவுறுத்தியுள்ளேன்.

இவ்வாறுகழகத்தலைவரும்முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

விருதுநகர் பட்டாசு ஆலையில் வெடி விபத்து!

22 பேர் உயிரிழப்பு!

விருதுநகர், ஏப்.20

விருதுநகர் மாவட்டம் கட்டனார்பட்டி பகுதியில் செயல்பட்டு வந்த பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் குறைந்தது 23 பேர் உயிரிழந்த நிலையில் ஆறு பேர் காயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டுள்ளனர்.

விருதுநகர் மாவட்டம் வாச்சக்காரப்பட்டி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கட்டனார்பட்டி பகுதியில்முத்துமாணிக்கம் என்பவருக்கு சொந்தமான வனஜா பட்டாசு ஆலை செயல்பட்டு வருகிறது. 100-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இதில் பணியாளர்களாக உள்ளனர்.

இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமை பிற்பகலில் இந்த ஆலையில் திடீரென வெடி விபத்து ஏற்பட்டது. இந்த வெடி விபத்தால் அங்கு பணியாற்றி கொண்டிருந்த தொழிலாளர்கள் பாதிக்கப்பட்ட நிலையில் பலத்த வெடி விபத்தால் மூன்றுக்கும் மேற்பட்ட அறைகள் சிதறி சேதமடைந்ததுடன், சில கட்டடங்கள் முற்றிலும் தரைமட்டமாகின.

இந்த விபத்து குறித்த தகவல் கிடைத்ததும் தீயணைப்புத்துறையினர் மீட்புப்பணிகளில் ஈடுபட்டனர். முதல் கட்ட தகவல்களின்படி 20 பேரின் உடல்களை மீட்டனர்.

மேலும் கடுமையான தீக்காயங்களுடன் மீட்கப்பட்ட 6 பேர் விருதுநகர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கடந்த சில நாட்களுக்கு முன்பு விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டை பகுதியில் நடந்த பட்டாசு ஆலை விபத்தில் 4 பேர் உயிரிழந்த நிலையில், மீண்டும் அதே மாவட்டத்தில் இவ்வளவு பெரிய அளவில் உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளது. இந்த ஆண்டு நடந்த மிகப்பெரிய பட்டாசு ஆலை விபத்தாகவும் இது கருதப்படுகிறது.

பட்டாசு ஆலை வெடி விபத்து குறித்து மாவட்ட ஆட்சியர் சுக புத்ரா மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்ரீநாதா நேரில் ஆய்வு செய்தனர். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மாவட்ட ஆட்சியர், "பட்டாசு ஆலைகளில் ஞாயிற்றுக்கிழமை வேலை செய்வதே முதல் விதிமீறல்தான்" என்றார். மேலும் ஆலை உரிமம் பெற்றே இயங்கி வந்ததாக கூறிய அவர், வேறு விதிமீறல்கள் குறித்து ஆய்வு நடைபெற்று வருவதாகக் கூறினார்.

மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்ரீநாதா செய்தியாளரிடம் பேசுகையில், "வெடி விபத்து ஏற்பட்ட பட்டாசு ஆலை உரிமையாளர் மீது வழக்குப்பதிவு செய்து நடவடிக்கை எடுக்கப்படும். தற்போது உரிமையாளர் போர்மேன் ஆகியோர் தலைமறைவாக உள்ளதால் அவர்களை பிடிப்பதற்கு நான்கு சிறப்பு தனிப்படை அமைக்கப்பட்டுள்ளது" என்றார்.

உரிமம் இல்லாமல் இயங்கும் பட்டாசு ஆலைகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்என மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்ரீநாதா எச்சரித்தார்.

விபத்துக்கு தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார். எக்ஸ் பக்கத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், கட்டனார்பட்டியில் ஏற்பட்ட பட்டாசு ஆலை வெடி விபத்தில் பலர் உயிரிழந்துள்ள துயரச் செய்தி மிகுந்த வேதனையளிக்கிறது. உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கல்கள்.

மீட்புப் பணிகளை விரைவுபடுத்திக் கண்காணிக்கவும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஆறுதல் கூறவும் உடனடியாகச் சம்பவ இடத்திற்கு விரையுமாறு அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் மற்றும் தங்கம் தென்னரசு ஆகியோரை கேட்டுக்கொண்டுள்ளேன். மாவட்ட ஆட்சியரைத் தொடர்புகொண்டு, தேவைப்படும் அனைத்து உதவிகளையும் ஒருங்கிணைக்க அறிவுறுத்தியுள்ளேன் என குறிப்பிட்டுள்ளார்.

விபத்துக்கு இரங்கல் தெரிவித்துள்ள பிரதமர் நரேந்திர மோதி, தமிழ்நாட்டின் விருதுநகர் மாவட்டத்தில் நிகழ்ந்த விபத்து மிகுந்த வேதனையளிக்கிறது. தங்களின் அன்புக்குரியவர்களை இழந்து வாடுவோருக்கு எனது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய வேண்டுகிறேன் என குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாட்டின் உரிமைகளைப் பறிக்க நினைக்கும்

பா.ஜ.க.வின் அரசியல் நாடகத்தை மக்கள் புரிந்து கொள்வார்கள்!

புதுக்கோட்டையில் அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!

புதுக்கோட்டை ஏப்.20-

நாடாளுமன்றத்தில் கொண்டு வந்த தொகுதி மறுவரையறை சட்ட மசோதா உள்ளிட்ட மூன்று சட்ட மசோதா தோல்வியடைந்தது குறித்து புதுக்கோட்டை கீழ இரண்டாம் வீதியில் உள்ள தமிழ்நாடு இயற்கை வளங்கள் துறை அமைச்சரும் திருமயம் தொகுதி திமுக வேட்பாளருமான எஸ். ரகுபதி செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது அவர் கூறுகையில்:

முதல் வெற்றியாகப் நாடாளுமன்றத்திலே வெற்றி கிடைத்திருக்கிறது. தொகுதி மறுசீரமைப்பு என்கின்ற பெயரிலே தமிழ்நாட்டின் உரிமைகளை நசுக்க நினைத்த பா.ஜ.க. கொண்டு வந்த தொகுதி மறுசீரமைப்பு சட்ட மசோதா நாடாளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு 352 வாக்குகள் இல்லை என்று தெரிந்தும் வேண்டுமென்றே பா.ஜ.க. இந்த சட்ட மசோதாவைக் கொண்டு வந்தது. மூன்றில் இரண்டு பங்கு மெஜாரிட்டி அவர்களுக்கு வேண்டும். ஆனால் அவர்களுக்கு இருப்பது சிங்கிள் மெஜாரிட்டி தான். அதுவும் நிதிஷ் குமாரும், சந்திரபாபு நாயுடுவும் ஆதரிக்கிறதால் தான். அந்த சிங்கிள் மெஜாரிட்டி, இல்லாவிட்டால் ஆட்சியே கிடையாது.

எனவே மூன்றில் இரண்டு பங்கு மெஜாரிட்டி தேவையான ஒரு சட்டத் திருத்த மசோதாவைக் கொண்டு வந்து அதன் மூலமாக ஏதாவது ஆதாயம் தேடலாமா என்று அவர்கள் பார்க்கிறார்கள். ஒன்று மட்டும் நிச்சயம், தமிழ்நாடு மக்கள் மட்டுமல்ல, இந்தியாவில் உள்ள மக்களும் பா.ஜ.க.வின் கபட நாடகத்தை நன்றாகப் புரிந்து கொள்வார்கள்.

தொகுதி மறுவரையறை என்பது வேறு, மகளிர் இடஒதுக்கீடு என்பது வேறு, இரண்டையும் சேர்த்து குழப்பி மக்களைக் குழப்புவதற்காகப் பார்த்தார்கள்.

நாம் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைச் சரியாக அமல்படுத்தி இருக்கிறோம். அதாவது அரசாங்கத்தினுடைய ஒரு சட்டத்தை அமல்படுத்தியதற்காகத் தென் மாநிலங்களுக்குத் தண்டனை தருகின்ற செயலை இன்றைக்கு ஒன்றிய அரசு செய்து வருகிறது.

1952லே நம்முடைய நாடாளுமன்ற இடங்கள் 42. இப்பொழுது நம்முடைய இடங்கள் 39. மக்கள் தொகை கட்டுப்பாட்டைக் குறைத்ததால் நமக்குக் கிடைத்திருக்கிற பரிசு, ஒன்றிய அரசு தந்திருக்கிற பரிசு.

இனிமேல் சட்டங்கள் போட்டால் அதைக் கடைபிடிக்கக்கூடாது என்று ஒன்றிய அரசு புத்தி சொல்லியிருக்கிறது. எனவே எங்களைப் பொறுத்த வரைக்கும் நாங்கள் சரியான பாதையில் போய்க்கொண்டிருக்கின்றோம்.

தொகுதி மறு வரையறை வர வேண்டும், தொகுதி மறுவரை வர வேண்டும் என்பது எப்பொழுதுமே 20 ஆண்டுகளுக்கு ஒரு முறை செய்யப்பட வேண்டும். மக்கள் தொகை கணக்கெடுப்பை எடுத்துவிட்டு நீங்கள் செய்யுங்கள் என்றுதான் சொல்லுகிறோம்.

பல்வேறு கட்சிகள் மக்கள் தொகை கணக்கெடுப்பு எடுக்க வேண்டும், அதுவும் சாதிவாரி கணக்கெடுப்பு எடுக்க வேண்டும் என்கின்ற கோரிக்கையெல்லாம் வைத்திருக்கின்றன. எனவே நாங்கள் சாதிவாரி கணக்கெடுப்பை மக்கள் தொகை கணக்கெடுப்போடு சேர்த்து எடுக்க இந்திய அரசால்தான் முடியும்.

ஏனென்றால் இங்கே இருக்கக்கூடிய யாதவர்கள் பீகாரிலும் இருக்கிறார்கள், மற்ற மாநிலங்களிலும் இருக்கிறார்கள். அதேபோல இங்கே சேர்த்து இருக்கக்கூடிய நாயுடு போன்றவர்கள், ரெட்டியார் போன்றவர்கள், இவர்கள் எல்லாம் பிற மாநிலங்களிலும் இருக்கக்கூடியவர்களாக இருக்கிறார்கள். அதேபோல 24 மனை தெலுங்குச் செட்டியார்களை எடுத்துக்கொண்டால் பல ஜாதியினர் ஒரு இரண்டு மூன்று மாநிலங்களில் இருக்கக்கூடியவர்களாக இருக்கிறார்கள். அதேபோல பல மாநிலங்களில் இருக்கக்கூடியவர்களும் இருக்கிறார்கள். எனவே சாதிவாரி கணக்கெடுப்பு என்பது ஒன்றிய அரசு எடுத்தால்தான் சரியாக இருக்கும் என்பது எங்களுடைய நிலைப்பாடு. அதை நாங்கள் வலியுறுத்தினாலும் கூட, இன்றைக்கு மக்கள் தொகை கணக்கெடுப்பை எடுக்கப் போகிறோம் என்று சொல்கிறார்களே தவிர அதற்கான நடவடிக்கைகளை எடுக்காமல் தொகுதி மறுவரை, தொகுதி சீரமைப்பு என்கின்ற பெயரிலே மகளிர் மசோதாவை இடையிலே புகுத்தி அதன் மூலமாக எதிர்க்கட்சிகளுக்கு ஏதாவது கெட்ட பெயரை வாங்கித் தந்துவிட முடியுமா என்று ஒரு தப்பு கணக்கை இன்றைக்கு பா.ஜ.க. போட்டிருக்கிறது.

நிச்சயமாக நாங்கள் மகளிர் இட ஒதுக்கீட்டுக்கு எதிரிகள் அல்ல. ஆனால் மூன்றில் ஒரு பங்கு மகளிருக்குக் கொடுப்பதிலே திமுக உள்ளிட்ட எந்தக் கட்சிக்கும் எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை. அதை ஒழுங்காகக் கணக்கெடுப்பு நடத்திக் கொடுங்கள் என்றுதான் கேட்கிறோம். அதே நேரத்தில் மக்கள் தொகைக் கட்டுப்பாட்டை அதாவது குடும்பக் கட்டுப்பாட்டை அமல்படுத்தியதற்காக எங்களுக்குத் தண்டனை தரக்கூடாது. அன்றைக்கு இருந்த நிலவரப்படிதான் தரவேண்டும். இல்லையென்றால் இனி எதிர்காலத்திலே ஒன்றிய அரசு கொண்டு வரும் எந்தச் சட்டத்தையும் யாருமே மதிக்க மாட்டார்கள். நம்ம சட்டத்தை மதித்தால் பாதிப்பு நமக்குத்தான் என்கின்ற உணர்வு அவர்களுக்கு வந்துவிடும். எனவேதான் இதை எதிர்த்து இன்றைக்கு வாக்கு வாங்கி அதன் மூலமாக அந்த சட்ட மசோதாவை நியாயப்படி முறியடித்திருக்கிறோம். இந்திய மக்களுடைய நலனிலே அக்கறை கொண்டு எங்களுடைய தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இந்த நடவடிக்கையை முன்னெடுத்திருக்கிறார்.

எடப்பாடிக்கு இப்ப என்ன பேசுறது, எது பேசுறதுன்னே ஒன்னும் தெரியல. எப்ப பாரு தூங்காமலே பேசிக்கொண்டே போறாரு. பஸ்ல போகும்போது கூட தூங்காம இருக்காருன்னு நினைக்கிறேன். அதனால அவர் வந்து என்ன சொன்னாலும் அது உளறல். எடப்பாடியினுடைய உளறல்களுக்கெல்லாம் நம்ம பதிலிக்க வேண்டியதில்லை. பெண்களுக்கு இட ஒதுக்கீட்டை கொண்டு வந்தது தி.மு.க. எனவே நாங்கள் வந்து என்றைக்குமே பெண்களுக்கு துரோகம் செய்யவே மாட்டோம். ஏன்னா பெண் வாக்காளர்கள் தான் எங்களுடைய இன்றைக்கு வாக்கு வங்கி. அந்த வாக்கு வங்கியில் கையவைப்பதற்காக இப்படி ஒரு சதிச்செயலை அவர்கள் செய்தாலும் கூட தமிழ்நாட்டு மக்கள் நிச்சயமாக, பெண்கள் அதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள், நம்ப மாட்டார்கள். இந்த சட்டத்தை அவசரமாக கொண்டு வந்ததின் நோக்கமே தேர்தல் நடக்கிற நேரத்திலே இந்த சட்டத்தை கொண்டு வரவேண்டிய அவசியமே கிடையாது.

ஆனால் அவசரமாக கொண்டு வந்ததே இந்த தேர்தல் நடக்கிற மாநிலங்களில் இருக்கக்கூடிய கட்சிகள், அது கேரளாவா இருந்தா அது கேரளா முடிஞ்சு போச்சு. தமிழ்நாட்டுக்கு ஏதாவது ஒரு பிரச்சனையை கிளப்பி விடலாமா என்கின்ற கண்ணோட்டத்திலே அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். எந்த பிரச்சனையும் அவர்கள் கிளப்ப முடியாது. ஏனென்றால் நாங்கள் ஆரம்பத்திலேயே எதிர்த்து குரல் கொடுத்து, கருப்புக்கொடி ஏந்தி எல்லாரும் அதை எதிர்க்க வேண்டும், தமிழ்நாடு மக்கள் ஒட்டுமொத்தமாக எதிர்க்க வேண்டும், இது தமிழ்நாட்டுக்கு பாதிப்பு என்று குரல் எழுப்பிருக்கிறோம். எனவே எங்களை வந்து தமிழ்நாட்டு மக்களிடமிருந்து எங்களை பிரிக்க முடியாது, எங்கள் தலைவரை பிரிக்க முடியாது.

59 தொகுதிகள் என்று அதை எழுத்துப்பூர்வமாக எழுதியே தரலையே. சொல்றது வாயால அமித் ஷா வாயால சொல்றது என்றைக்காவது செஞ்சிருக்காரா? வாயால வடை சுட்டுட்டு போய்டுவாரு, ஏமாத்திடுவாரு. அவர் வந்து இடஒதுக்கீடு மசோதாவால் தென் மாநிலங்களுக்கு பாதிப்பு வராது என்று இங்க வந்து சொல்லுவார். உத்தரப்பிரதேசத்துல போயி அல்லது பீகார்ல போயி இட ஒதுக்கீடு வந்து உங்களுக்கு சாதகமா இருக்குன்னு சொல்லுவார். அதனால் அவர் இடத்துக்கு தகுந்தாற்போல் பேசுகின்றவர்கள் நாங்கள் அல்ல. அது ஒரு பச்சோந்தித்தனம். அங்கங்க நிறம் மாறுறது. நாங்கள் நிறம் மாறுகின்றவர்கள் அல்ல. நாங்கள் எப்போதுமே ஒரே நிறத்தில், ஒரே கருத்தில், ஒரே நிலைப்பாடு கொண்டவர்கள்.

அமித்ஷாவின் பேச்சைக் கேட்டு எடப்பாடி பழனிச்சாமி சொல்வது என்பது தான் கொத்தடிமை, எழுதி கொடுத்தாச்சு சாசனம். அவரைப் பத்தி பிரச்சனை இல்லை. அ.தி.மு.க. இன்றைக்கு தங்களுடைய டெபாசிட்டை காப்பாற்றிக் கொள்வதற்கு வேண்டிய முயற்சிகளை அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள்.

59 தொகுதிகள் என்று எழுதி தரட்டும் அப்புறம் பார்ப்போம். அத்தைக்கு மீசை முளைக்கட்டும், அப்புறம் சித்தப்பான்னு கூப்பிடலாம் என்று அமைச்சர் தெரிவித்தார்.

சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் - 2026 தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து

மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கமல்ஹாசன் எம்.பி. தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்

தலைமைக் கழக அறிவிப்பு

தேதி	மாவட்டம்	சட்டமன்ற தொகுதி
20.04.2026	திருச்சி தெற்கு	திருவெறும்பூர்
	திருச்சி மத்திய	இலால்குடி
		திருவரங்கம்
		திருச்சி மேற்கு
	திருச்சி தெற்கு	திருச்சி கிழக்கு

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 19-04-2026.

தலைமைக் கழகம்,
தி.மு.க.

தொகுதி மறுவரையறை: பெரிய வெற்றி தமிழ்நாட்டுக்கு!

பெருந்தோல்வி ஒன்றிய அரசுக்கு! ஏன்? எப்படி?

சென்னை சிந்தனையாளர் மன்றம் சார்பில் கருத்தரங்கம்!

ஆ.இராசா எம்.பி. - இந்து என்.ராம் கருத்துரை!

சென்னை, ஏப்.20-

சென்னை சிந்தனையாளர் மன்றம் சார்பில் மாபெரும் கருத்தரங்கம் இன்று (20.4.2026- திங்கள் கிழமை) மாலை 6 மணியளவில் ஆர்.ஏ.புரம், முத்தமிழ்ப் பேரவை, திருவாவடுதுறை இராஜரத்தினம் கலையரங்கத்தில் நடைபெறுகிறது.

"தொகுதி மறுவரையறை பெரிய வெற்றி தமிழ்நாட்டுக்கு! பெருந்தோல்வி ஒன்றிய அரசுக்கு ஏன்? எப்படி?" எனும் தலைப்பில் நடைபெறும் இக்கருத்தரங்கத்திற்கு முத்தமிழ்ப் பேரவைத் துணைத் தலைவர் குணாநிதி அமிர்தம் வரவேற்புரையாற்றுகிறார்!

சென்னை சிந்தனையாளர் மன்றம் ஒருங்கிணைப்பாளர் விஜயா தாயன்பன் தலைமை வகிக்கிறார்.

இக்கருத்தரங்கில் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., 'தி இந்து' குழும இயக்குநர் 'இந்து' என்.ராம் ஆகியோர் கருத்துரை வழங்குகின்றனர்.

இதில் கழக முன்னணியினர், திராவிட இன உணர்வாளர்கள், கழகத் தோழர்கள், சென்னை சிந்தனையாளர்கள் மன்றத்தினர் பங்கேற்றுச் சிறப்பிக்கின்றனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

சி.வி.எம். அண்ணாமலை

ஏப்ரல் 20 (1997)

சுயமரியாதை இயக்கக் காலத்திலிருந்து திராவிட இயக்கத்தின் செயல்வீரராகத் திகழ்ந்தவர்.

அன்றைய செங்கற்பட்டு மாவட்டக் கழகச் செயலாளராகப் பணியாற்றியவர். கலைஞர் அமைச்சரவையில் சமூக நலத்துறை அமைச்சராகப் பணியாற்றியவர்.

1938ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு ஆறு மாத காலம் பெல்லாரி சிறையில் அடைக்கப்பட்டார்.

பெரியார், அண்ணா அறிவித்த அறப்போராட்டங்களிலும் – தலைவர் கலைஞர் அறிவித்த போராட்டங்களிலும் பங்கேற்று சிறைப் பறவையாக விளங்கியவர்.

இயக்கக் கொள்கைகளை எடுத்துரைத்திட அண்ணா, கலைஞர் ஆகியோர் நடத்திய நாடகங்களில் பங்கேற்று நடித்தவர்.

1986ஆம் ஆண்டு நடைபெற்ற கழக முப்பெரும் விழாவில், தலைவர் கலைஞர் இவருக்கு அண்ணா விருது வழங்கிச் சிறப்பித்தார்கள்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

துவாக்குடி நகராட்சிப் பகுதிகளில்

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யா மொழி தீவிர வாக்கு சேகரிப்பு!

திருவெறும்பூர், ஏப். 20 -

திருவெறும்பூர் சட்ட மன்றத் தொகுதியின் மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளரும், தமிழகப் பள்ளிக்கல்வித் துறை அமைச்சருமான முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, துவாக்குடி நகராட்சிக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் (ஏப்ரல் 17) மாலை தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

அமைச்சர் அவர்கள் பின்வரும் பகுதிகளில் வீடு வீடாகச் சென்று பொதுமக்களைச் சந்தித்து ஆதரவு திரட்டினார்:

வலியடி கருப்பண்ண சுவாமி கோவில் தெரு துவாக்குடி வடக்கு மலை மற்றும் தெற்கு மலை செடி முருகன் கோவில் தெரு அண்ணா வளைவு பள்ளிவாசல் தெரு வ.உ.சி. நகர் வாக்கு சேகரிப்பின் போது அமைச்சர் பொதுமக்கள் மத்தியில் ஆற்றிய உரையின் சிறப்பம்சங்கள்:

திராவிட மாடல் சாதனை: 2021 முதல் 2026 வரையிலான காலக்கட்டத்தில் தமிழக அரசின் "திராவிட மாடல்" ஆட்சியின் கீழ் செயல்படுத்தப்பட்ட பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை விளக்கினார்.

துவாக்குடி வளர்ச்சிப் பணிகள்: இத்தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராகவும், அமைச்சராகவும் இருந்து துவாக்குடி நகராட்சியில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு புதிய திட்டங்கள், முடிவுற்ற கட்டுமானங்கள் மற்றும் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்ட பணிகள் குறித்து எடுத்துரைத்தார்.

அரசின் சாதனைகளைத் தொடரவும், தொகுதியின் வளர்ச்சியை முன்னெடுக்கவும் 'உதயசூரியன்' சின்னத்தில் வாக்களிக்குமாறு பொதுமக்களிடம் கேட்டுக் கொண்டார்.

பங்கேற்றோர்.

இந்நிகழ்வில் துவாக்குடி நகரமன்றத் தலைவரும், நகரச் செயலாளருமான காயாம்பு, வார்டு கவுன்சிலர்கள், வார்டு செயலாளர்கள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் மற்றும் பொது மக்கள் எனப் ஏராளமானோர் திரளாகக் கலந்து கொண்டனர்.

தென்காசி தொகுதி,சுரண்டை நகர செயலாளர் ஏ.ஜி.கணேசன் ஏற்பாட்டில், தென்காசி சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளர் டாக்டர் கலை கதிரவனை ஆதரித்து மாற்றுத்திறனாளிகள் அணி மாநில தலைவர் ரெ.தங்கம் தெருமுனை கூட்டம் வாயிலாக கழக அரசின் சாதனைகளைக் கூறி வாக்கு சேகரித்தார்.